# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## மதிப்பீட்டுத் தாள் 2023 – 2024
## வளர்தமிழ் 11

TEDC

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்
மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

TEDC

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்..." என்ற சிலப்பதிகார வாழ்த்துப்பாவில் திங்கள் என்ற சொல் குறிப்பது

அ) கதிரவனை ☐ ஆ) நிலாவை ☐

இ) மாமழையை ☐ ஈ) புகாரை ☐

2. உடன்படுமெய்யெழுத்துகள்

அ) ய்,வ் ☐ ஆ) க்,ங் ☐

இ) ப்,ம் ☐ ஈ) த்,ந் ☐

3. முதல் என்பதன் எதிர்ச்சொல்

அ) மறதி ☐ ஆ) சூடு ☐

இ) ஈறு ☐ ஈ) தொடக்கம் ☐

4. "பாடிய தமிழை மட்டும் பாதியில் விட்டிடாதே..." எனக் கூறிய கவிஞர்

அ) உதயை வீரையன் ☐ ஆ) இரவி ☐

இ) சாலை இளந்திரையன் ☐ ஈ) அம்பி ☐

5. யாழ்ப்பாணத்தில் இலவய நூலகம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1921 ☐ ஆ) 1933 ☐

இ) 1981 ☐ ஈ) 1948 ☐

6. மடித்துமடித்து என்பது

அ) அடுக்குத்தொடர் ☐ ஆ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

இ) இரட்டைக்கிளவி ☐ ஈ) இணைமொழி ☐

TEDC

7. நிகழ்காலப் பன்மையைக் குறிக்கும் வினைச்சொல்

அ) தாவுகின்றன ☐ ஆ) பாய்ந்தன ☐

இ) குரைத்தது ☐ ஈ) கொறித்தன ☐

8. ஐக்கிய நாடுகள் அவையின் நுழைவாயிலில் ———— என எழுதப்பட்டுள்ளது.

அ) நீரின்றி அமையாது உலகு ☐

ஆ) ஒன்றே குலம் ஒருவனே தேவன் ☐

இ) யாதும் ஊரே யாவரும் கேளிர் ☐

ஈ) நல்வரவு ☐

9. வாழைக்கு கச்சல் போல பலாவுக்கு

அ) மூசு ☐ ஆ) குரும்பை ☐

இ) வடு ☐ ஈ) கதிர் ☐

10. புற்றில் வாழும் விலங்கு

அ) உடும்பு ☐ ஆ) முயல் ☐

இ) நரி ☐ ஈ) அணில் ☐

11. பாக்குவெட்டி என்பது

அ) இயல்புப்புணர்ச்சி ☐ ஆ) தோன்றற்புணர்ச்சி ☐

இ) கெடுதற்புணர்ச்சி ☐ ஈ) திரிதற்புணர்ச்சி ☐

TEDC

12. கடலலை கரையை நோக்கி விரைவாக வந்து சென்றது. இங்கு வந்து என்பது

அ) பெயரெச்சம் ☐ ஆ) வினைமுற்று ☐

இ) வினைத்தொகை ☐ ஈ) வினையெச்சம் ☐

13. தென்னை + தோப்பு

அ) தென்னத்தோப்பு ☐ ஆ) தென்னம்தோப்பு ☐

இ) தென்னந்தோப்பு ☐ ஈ) தென்னைத்தோப்பு ☐

14. பாரதியார் நனி சிறந்த புலவர். இச்சொல்லியத்தில் வந்துள்ள உரிச்சொல்

அ) பாரதியார் ☐ ஆ) சிறந்த ☐

இ) நனி ☐ ஈ ) புலவர் ☐

15. ''ஊக்கமது கைவிடேல்'' இது

அ) தனிமொழி ☐ ஆ) பொதுமொழி ☐

இ) தொடர்மொழி ☐ ஈ ) வருமொழி ☐

16. யாழ்நகருக்குத் தீயிடப்பட்டபோது எரிந்து சம்பராகிய தமிழ் நாளிதழ் அலுவலகம்

அ) வீரகேசரி ☐ ஆ) ஈழநாடு ☐

இ) ஈழமுரசு ☐ ஈ ) தினகரன் ☐

17. குற்றியலுகர எழுத்துகளில் ஒன்று

அ) மு ☐ ஆ) ரு ☐

இ) யு ☐ ஈ ) டு ☐

18. இயற்கை அழிவுகளில் இருந்து மக்களைப் பாதுகாப்போம். இதில் இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) இயற்கை ☐ ஆ) அழிவுகள் ☐

இ) பாதுகாப்போம் ☐ ஈ ) மக்கள் ☐

TEDC

19. சமுத்திரம் என்ற வடசொல்லின் தமிழ்ச்சொல்

அ) நீராட்டு ☐ ஆ) காவேரி ☐

இ) மாவாரி ☐ ஈ) கடல் ☐

20. உயிர்மெய்க்குறில் எழுத்துகளின் மாத்திரை

அ) 1 ☐ ஆ) 2 ☐

இ) 1/2 ☐ ஈ) $1\frac{1}{2}$ ☐

21. கலைவிழாவிற்கு வந்தவனைக் காணவில்லை. இங்கு வந்தவனை என்பது

அ) செய்வினை ☐ ஆ) குறிப்புவினை ☐

இ) வினையாலணையும்பெயர் ☐ ஈ) பிறவினை ☐

22. கவனமாக இருத்தல் என்ற கருத்தை விளக்கும் மரபுச்சொற்றொடர்

அ) கண்ணாயிருத்தல் ☐ ஆ) கைபிசைதல் ☐

இ) வாய்காட்டுதல் ☐ ஈ) நாக்குப்புரளுதல் ☐

23. அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைத் தொடக்கி வைத்தவர்

அ) விபுலாநந்த அடிகள் ☐ ஆ) தாவீது அடிகள் ☐

இ) தனிநாயகம் அடிகள் ☐ ஈ) மறைமலை அடிகள் ☐

TEDC

24. வினைப்பகுசொல்லின் காலங்காட்டும் சொல் உறுப்பு

அ) சந்தி ☐ ஆ) விகுதி ☐

இ) இடைநிலை ☐ ஈ) பகுதி ☐

25. கயவாகு மன்னன் கண்ணகிக்குக் கோவில் கட்டிய நாடு

அ) இந்தியா ☐ ஆ) சிங்கப்பூர் ☐

இ) மலேசியா ☐ ஈ) இலங்கை ☐

26. எரிமலைகளை எட்டி உதைப்போம்! எண்ணங்களைக் கொட்டி விதைப்போம்!

என்ற அடி இடம்பெற்ற கவிதையின் தலைப்பு

அ) ஓடிடும் தமிழா ☐ ஆ) மானிடாசொல்! ☐

இ) இனியும் ☐ ஈ) ஓங்குபுகழ்கற்கள் ☐

27. நெஞ்சையள்ளும் மணியாரம் எனப் புகழப்படும் நூல்

அ) வளையாபதி ☐ ஆ) குண்டலகேசி ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ) மணிமேகலை ☐

28. மாரி பொழிந்தது. இது

அ) சினையாகுபெயர் ☐ ஆ) இடவாகுபெயர் ☐

இ) குணவாகுபெயர் ☐ ஈ) காலவாகுபெயர் ☐

29. ''கன்றிய கள்வன் கையது ஆகின் கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கென''

எனக் கூறியவன்

அ) பொற்கொல்லன் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐

இ) வாயிற்காவலன் ☐ ஈ) நெடுஞ்செழியன் ☐

TEDC

30. 'மதியாதார் தலைவாசல் மிதியாதே' இச்சொல்லியத்தின் தோன்றா உறுப்பு

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐

இ) செயப்படுபொருள் ☐ ஈ) அடைமொழி ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஒல்லையூர் என்ற ஊரிலே சாத்தன் என்னும் பெருவீரன் வாழ்ந்து வந்தான். அவன் மழை போல வாரி வழங்கும் வள்ளல். சாத்தனது உயர்ந்த புகழ் கேட்டுக் குடவாயிற் கீர்த்தனார் என்ற புலவர் புளகாங்கிதம் அடைந்தார். தேன்குடத்தில் தேனுண்ண வருகின்ற வண்டைப்போல பேராவலுடன் சாத்தனைக் காண ஒல்லையூருக்கு வந்தார். ஊரை அடைந்ததும் புலவருக்கு அதிர்ச்சியான செய்தியொன்று காத்திருந்தது. பகைவருடனான போரிலே சாத்தன் இறந்துவிட்டான் என்ற செய்திகேட்டு புலவர் புலம்பி அழுதார். பாடிப் பரிசு பெறவில்லை என்ற வருத்தம் அவருக்கில்லை. ஆனால் மாபெரும் வீரனையும் சிறந்த பண்பாளனையும் இழந்துவிட்டோமே! என அவரது உள்ளம் வருந்தியது. புலவர் செய்வதறியாது திரும்பிச் செல்லும் வழியில் முல்லைக்கொடி பூத்திருப்பதைக் கண்டார். முல்லைக்கொடியைப் பார்த்து முல்லையே ''தனது வீரம் வெளிப்படுமாறு பகைவர்களைக் கொன்ற வலிய வேலையுடைய சாத்தன் இறந்த பின்பும் ஒல்லையூர் நாட்டிலே பூத்தாயோ! எதற்காகப் பூத்தாய்? பூவைப்பறித்து யார் சூடுவர்? இளையோர், வளையல் அணிந்த மகளிர் சூடார், பாணனும் பாடினியும் கூடச் சூடார். மக்கள் அனைவரும் சாத்தன் இறந்த செய்திகேட்டு கையறுநிலையில் உள்ளனர்'' என தன்னை மறந்து முல்லையைப் பார்த்துப் புலம்பும் பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

TEDC

1. மக்கள் அனைவரும் ஏன் கையறுநிலையில் உள்ளனர்?

______________________________________________

______________________________________________

2. ஏன் புலவரது உள்ளம் வருந்தியது?

______________________________________________

______________________________________________

3. சாத்தனது புகழ் கேட்டு புளகாங்கிதம் அடைந்த புலவர் யார்?

______________________________________________

______________________________________________

4. சாத்தன் என்னும் பெருவீரன் வாழ்ந்த ஊர் எது?

______________________________________________

______________________________________________

5. முல்லையைப் பார்த்து புலவர் புலம்பும் பாடல் இடம்பெற்ற நூல் எது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

TEDC

## 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. குடிமக்களுக்காக ஆடப்படும் கூத்தின் பெயர் என்ன?

_______________________________________________

2. யாழ்நூலகம் எரிக்கப்பட்டதன் நோக்கங்கள் எவை?

_______________________________________________

_______________________________________________

3. தலைக்கோல் என்பது என்ன?

_______________________________________________

4. யாழ்நூலகம் எக்கட்டிடக் கலையை ஒத்ததாகக் கட்டப்பட்டது?

_______________________________________________

5. "தென்னவர் செங்கோல் என்னால் வளைந்ததே" எனக் கூறியவர் யார்?

_______________________________________________

6. ஓர் இனத்தின் அடையாளத்தைக் காட்டுவது எது?

_______________________________________________

7. வான்கண் விழியா வைகறை யாமத்தில் புகாரை விட்டு நீங்கியவர்கள் யாவர்?

_______________________________________________

TEDC

புள்ளிகள் 10

4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.

1.




2. முள்ளிவாய்க்கால் மண்ணே! -நீ சொல்லு
நம் வீரர் காட்டிய வீரத்தை

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

TEDC

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

ஒரு காட்டில் சின்னஞ்சிறிய குடிசைகள் காணப்பட்டன. அங்கே ஒரு குடிசையின் முற்றத்தில் வாகைமரம் ஒன்று வளர்ந்து நின்றது. அது பசுமைப்பந்தல் வேய்ந்தாற் போல நிழலையும் குளிர்ச்சியையும் அளித்துக் கொண்டிருந்தது. வேட்டையாடிக் களைத்த வேடன் ஒருவன் அம்மரத்தின் கீழ் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். அவனது மனைவி நெல்லைக் குற்றிச்சோறு ஆக்கி சுடுசோறும் தயிரும் சேர்த்து கணவனுக்குக் கொடுக்க விரைந்து வந்தாள். அங்கே கொடிய விலங்குகளை வேட்டையாடும் வலிமை மிக்க தன் கணவன் உறங்குவதைக் கண்டாள். அவன் உறக்கம் கலைந்து எழும்வரை அவனருகே காத்திருந்தாள்.

1. சிறப்புப்பெயருடன் பொதுப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

2. மென்றொடர்க்குற்றியலுகரச் சொல்லைத் தருக.

_______________________________________________

3. இங்கு வந்துள்ள உவமைத் தொடரைத் தருக.

_______________________________________________

4. வினைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

5. சினைப்பெயர் ஒன்று தருக.

_______________________________________________

6. அஃறிணைப் பன்மை ஒன்று தருக.

_______________________________________________

TEDC

7. சின்னஞ்சிறிய என்பது எவ்வகை தொடர்?

______________________________

8. வினையெச்சம் இரண்டு தருக.

______________________________

9. ‘கணவனுக்கு’ இச்சொல்லில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு?

______________________________

10. இடப்பெயர் ஒன்று தருக.

______________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. தரப்பட்டுள்ள தொகைகளை வகைப்படுத்தி எழுதுக.**

காய்கனி மழைக்கை வெண்குடை
செந்தாமரை தாய்தந்தை பவளவாய்

| பண்புத்தொகை | உம்மைத்தொகை | உவமைத்தொகை |
|---|---|---|
| | | |
| | | |

புள்ளிகள் 03

**2. பின்வரும் புணர்ச்சிகள் ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுகள் தருக.**

திரிதல் ______________________

கெடுதல் ______________________

புள்ளிகள் 02

TEDC

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| ஒரு | ஆடு | யானைக்கும் | அணை |
| அழுகிறது | அடி | ஓநாய் | அடிநாக்கில் |
| | வருமுன் | நஞ்சும் | உண்டாகுமா |
| சறுக்கும் | கட்ட | கை | ஓசை |
| | | | வெள்ளம் |
| நனைகிறது | நுனி | என்று | வேண்டும் |
| தட்டினால் | நாக்கில் | அமிழ்தமும் | |

1. பேராற்றலும் தோற்கும்.

______________________________

2. ஏமாற்றி அழிக்கும் செயல்.

______________________________

3. முன்னேற்பாட்டுடன் இருத்தல்.

______________________________

4. ஒரு செயலில் இரு கன்னை.

______________________________

5. வஞ்சகப் பேச்சு.

______________________________

புள்ளிகள் 05

TEDC

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

இன்று கார்த்திகை 27. மாவீரர் நாள் தமிழீழத்தில் மட்டுமன்றி உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களால் நினைவு கூரப்படும் நாள். இந்நாளில் மக்கள் கார்த்திகை மலர்களுடன் துயிலும் இல்லங்களுக்குச் செல்வர். அங்கு மாவீரர்களை வணங்குவர். இந்த நிகழ்வு அனைவரது கண்களையும் கலங்க வைக்கும். மாவீரர் நாள் எம் மண்ணின் மாவீரர்களின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றது.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

TEDC

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ யாழ் நூலகம்
- ✸ சிலப்பதிகாரம்
- ✸ உலகப் பொருளாதார வீழ்ச்சியும் அதன் விளைவுகளும்
- ✸ சிறுதுளி பெரு வெள்ளம்

புள்ளிகள் 15

TEDC